**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2014**

---

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 350,000 கிரயத்திலான கட்டிடம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கக் கடன் மற்றும் பெறவேண்டிய 2 கடன் வட்டி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,490,195 ஆக இருந்த போதிலும், பட்டோலைகளின் பிரகாரம் அக்கூட்டுத்தொகை ரூபா 55,080,989 ஆக இருந்தமையால் ரூபா 23,590,794 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

ரூபா 50,799,611 கூட்டுத்தொகையான கூட்டுறவுச் சங்க கடன், கமநல நிதிய சங்கக் கடன், கல்லூரிக் கடன், லொறி வண்டிக் கடன் மற்றும் கமநல நிதிய மீதிகள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள், காலப் பகுப்பாய்வு மற்றும் விரிவான பட்டோலைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,183,600 தொகையான செயலாற்றல் முற்பணம் மற்றும் பெறவேண்டிய நீதிமன்ற இழப்பீடு என்பன 06 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2,411,653 தொகையான மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய கடன்பட்டோர் இனங்காணப்பட்டு அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் அரசாங்க கணக்கிலிருந்து பெறவேண்டிய ரூபா 180,394 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 188(2) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 300,101 கூட்டுத்தொகை வைப்புச் செய்யப்பட்ட போதிலும், தீர்வையாகாத 04 காசோலைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 396 | 2010, 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்கள் முதல் 04 ஆண்டுகள் வரையான ரூபா 54,964 கூட்டுத்தொகையான 07 காசோலைகள் தொடர்பாக 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 31 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | |
| (i) 4.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டிற்காக உரிய அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) 4.2 ஆம் பந்தி — நிதியத்திற்காக பராமரிக்கப்படும் புறம்பான வங்கிக் கணக்கும் புத்தகங்களும் முறையாக இணக்கம் செய்யப்பட்டு செயன்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்குமான அறிக்கை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 4.3 ஆம் பந்தி — கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் மீளாய்வாண்டிற்கான திரட்டிய நிதியத்தின் மாற்றங்களைக் காட்டும் கூற்றொன்றை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 11,998,614 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,699,969 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,698,583 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய செலவினம் ரூபா 20,132,234 ஆல் குறைவடைந்த போதிலும், பங்களிப்புத் தொகை வருமானம் ரூபா 15,360,377 ஆல் குறைவடைந்தமை மற்றும் நன்கொடைகள் ரூபா 18,414,346 ஆல் அதிகரித்தமை மேற்குறித்த வீழ்ச்சிக்காக பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், 2010, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 155,473,139 மற்றும் ரூபா 10,636,877 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், 2010, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 20,195,265, ரூபா 31,949,148 மற்றும் ரூபா 5,861,199 ஆன நிதி மிகையொன்று காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1974 சனவரி 10 ஆம் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு விதிகளில் 43 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு நிதியத்திலிருந்து பணத்தை செலவு செய்யக்கூடிய முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

- கூட்டுறவு கல்வி, விரிவாக்கல் மற்றும் பிரச்சார வேலைகள்.
- கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ செயற்திறனை மேம்படுத்துதல்,
- கூட்டுறவு சங்கங்களுக்கு உதவியளித்தல்

மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக மாகாண கூட்டுறவு ஆணையாளர் 06 கூட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 500,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) ''நென சக்தி'' பெயரில் பாடசாலை நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டில் ரூபா 1,000,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான நிகழ்ச்சித்திட்டமொன்று மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நடைமுறைக் கணக்கில் ரூபா 41,000,000 ஆன சராசரி மீதியொன்று காணப்பட்டமையால் அதன் மிகை நிதியை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010, 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலிருந்து வரும் ரூபா 141,539 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத 07 வங்கி செலவு மீதிகள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1974 சனவரி 10 ஆம் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு விதிகளில் 43 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு கல்வி, செயற்திட்டங்கள் மற்றும் பிரச்சார வேலைகள் கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ செயற்திறனை மேம்படுத்துதல், மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு உதவியளித்தல் போன்ற நோக்கங்களுக்கு கூட்டுறவு நிதியத்திலிருந்து நிதியை செலவிட முடியுமான போதிலும், அதற்கு முரணான 05 செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 194,143 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வ/ப கொபைஹேன பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 ஆன கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,983,090 மற்றும் நிலுவை வட்டியாக ரூபா 378,540 அறவிடப்பட்டிருந்ததுடன், இத்தொகையை அறவிடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறான செயற்பாடற்ற கடன் பட்டோலையின் பிரகாரம் நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 30,991,460 ஆன செயற்பாடற்ற கடன் மீதிகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 456,854 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அச் செயற்பாடற்ற கடன் மீதியில் 20 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 8,270,900 கூட்டுத்தொகையான கடன் தொகையில் எவ்வித தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன், அக் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கூட்டுறவு சபையின் வேண்டுகோளின் பிரகாரம் வடமேல் மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அச்சபையால் 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பக்மஹா விழாவின் விளம்பர நடவடிக்கைகளுக்காக ஊடக நிறுவனமொன்றுக்கு கொடுப்பனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நிதியத்தலிருந்து ரூபா 3,427,200 தொகை தேசிய கூட்டுறவு சபைக்கு எவ்வித அங்கீகாரமொன்றில்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சுழற்சி நிதியத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட ரூபா 378,350,000 பெறுமதியான நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 324,000,000 ஆன கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 4,944.27 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்காக ரூபா 329,288,382 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 செப்தம்பர் 30 ஆந் திகதியளவில் இந்த அரிசி இருப்பிலிருந்து ரூபா 77,998,590 பெறுமதியான 1171.15 மெற்றிக் தொன் அரசி காலாவதியானமையால் மனிதப் பாவனைக்கு பொருத்தமற்றதாக இருந்தது.

## 4.5 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமேல் மாகாணத்தில் பாடசாலையொன்றில் கூட்டுறவுச் சங்கமொன்றையும், சிற்றுண்டிச்சாலையொன்றையும் புத்தக விற்பனைச்சாலையொன்றையும் தாபிப்பதற்குரிய கட்டிடமொன்று நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக விடயதிற்குப் பொறுப்பான அமைச்சரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொள்வனவுச் செயற்பாட்டிலிருந்து விலகியும் முறையான உடன்படிக்கையொன்று இல்லாமலும் மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் ரூபா 14,246,171 ஆன பணம் கூட்டுறவு மொத்த வியாபார நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அப்பணத்திலிருந்து சிற்றுண்டிச்சாலையொன்றும் புத்தக விற்பனைசாலையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுறவுச் சங்கம் நடாத்துவதற்கான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படாமல் பாடசாலையில் நீச்சல் தடாகத்திற்காக பார்வையாளர்கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உருளைக் கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டு திவிநெகும நலனாளிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக சுழற்சி நிதியத்திலிருந்து ரூபா 10,000,000 தொகை ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உருளைக்கிழங்கு நாட்டின் அனைத்து திவிநெகும நலனாளிகளுக்கும் 2 கிலோகிராம் வீதம் பகிர்ந்தளிப்பது நோக்கமாக இருந்த போதிலும், வடமேல் மாகாண திவிநெகும நலனாளிகளுக்கு மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இங்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் திவிநெகும திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இடையே ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பேரில் இப்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. இப்பணம் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நிதியத்திற்கு மீளளிக்கப்படாதிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அப்பணத்தை மீள்நிரப்ப முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய கூட்டுறவு மாநாட்டிற்காக ரூபா 4,234,932 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 3,983,732 தொகை விளம்பர நடவடிக்கைகளுக்காக கொள்வனவுச் செயற்பாட்டிலிருந்து விலகி தனியார் கம்பனியொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 395 நாட்கள் தாமதித்து 2016 மார்ச் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பயன்பாட்டுப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| (ஆ) சொத்து நிர்வாகம் | உரிய திகதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளாமை. |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | (i) கூட்டுறவுச் சங்கங்களில் கடன் அறவிடலின் தாமதம் மற்றும் பின்தொடர் நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்படாமை |
| | (ii) மிகை நிதியை முதலீடு செய்யாமை |